(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 52.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, நவெம்பர் 26, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0096/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களாக செலுத்தப்படவேண்டிய மொத்த பொதுக் கடன் தொகையை,

(i) 1948 முதல் 1994 வரை ஒவ்வொரு வருட இறுதியிலும் எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்,

(ii) 1995 முதல் 2010 இல் இற்றைவரை ஒவ்வொரு வருட இறுதியிலும் எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (i), (ii) ஆகிய காலப்பகுதிகளுக்கான மொத்த தவணை முறைச் செலுத்தல் (முதல் + வட்டி) எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) 1948 முதல் 2003, 2004, 2005, 2006, 2007 மற்றும் 2008 முதல் இற்றைவரை வழங்கப்பட்ட கடன்களுக்கான சராசரி வட்டிக்கான செலவையும் சேர்த்து பின்வரும் நிறுவனங்கள், நாடுகளுக்கான மொத்தக் கடன் எவ்வளவு என்பதை அவர் தெரிவிப்பாரா?

(i) உலக வங்கி

(ii) சர்வதேச நாணய நிதியம்

(iii) ஆசிய அபிவிருத்தி வங்கி

(iv) ஜே.பி.ஐ.சி

(v) ஐக்கிய அமெரிக்கா

(vi) ஜப்பான்

(vii) ஐரோப்பிய ஒன்றிய நாடுகள்

(viii) இந்தியா

(ix) சீனா

(ஈ) கடந்த 5 வருடங்களுக்கான தலா வருமானத்துடன் ஒப்பிட்டு தலா படுகடனை வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0359/ '10

2\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையிலுள்ள,

(i) அரச தேசிய பாடசாலைகளினதும் ஏனைய அரச பாடசாலைகளினதும் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) முதலாம் வகுப்புத் தொடக்கம் உயர்தரம் வரை ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறுகின்ற அரச பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் சகல வகுப்பு களுக்கும் ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறாவிடினும் ஆகக்குறைந்தது ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறுகின்ற அரச பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(iii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பண்டாரகம மற்றும் மில்லனிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) (i) ஆங்கில மொழிப் பயன்பாடு தொடர்பான எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கென சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஆகக்குறைந்தது ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுகின்ற இரண்டு பாடசாலைகளையாவது உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) இன்றேல், இதன் பொருட்டு முன்வைக்கப்படுகின்ற மாற்றுத் தீர்வுகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0406/ '10

3\.

கௌரவ திலங்க சுமதிபால,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பு மாவட்டத்திலுள்ள,

(i) நான்கு பார்ச்சஸிலும் குறைந்த நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) குறைந்த வசதிகளைக் கொண்ட அறுதி பெறப்படாத வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அறுதி பெறப்படாத வீடகள் அமைந்துள்ள மொத்த நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வசதி குறைந்த இவ்வீடுகளை வசதி நிறைந்த வீடுகளாக மாற்றுவதற்காக அவர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0410/ '10

4.

கௌரவ திலும் அமுனுகம,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் அரச சேவையிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) 2010 ஆண்டில் அரச சேவையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) 2004 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலும் இந்த ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) இவ்வாறு அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0463/ '10

5.

கௌரவ நூர்டீன் மசூர்,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மீள் குடியேற்ற அமைச்சின் ஒதுக்கீடுகளின் மூலம் நேரடியாக அல்லது அந்த அமைச்சின் முன்மொழிவுத் திட்டத்தின் பிரகாரம் வேறு அமைச்சின் ஒதுக்கீடு களின் மூலம் நடைமுறைபடுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் புத்தளம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த யுவதிகள் சுயதொழிலில் ஈடுபடும் பொருட்டு ஒவ்வொரு வருடத்திலும் நடத்தப்பட்ட தையல் பாடநெறிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) மேற்படி தையல் பாடநெறிகளுக்காக ஒவ்வொரு தவணையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட யுவதிகளின் எண்ணிக்கை, இவர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு தையல் பாடநெறிக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, இதில் செலவிடப்பட்டுள்ள தொகை மற்றும் அச்செலவுத்தலைப்பு யாதென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இப்பாடநெறிகளுக்கான பயிற்சியாளர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டோரின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் முகவரிகள், இவர்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட விதம் மற்றும் செலுத்தப்பட்ட தொகை யாவையென்பதை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன் ?

0498/ '10

6.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள குடும்ப சுகாதார சேவைப் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) அந்த பிரிவுகளில் கடமையாற்றுகின்ற குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) அந்த குடும்ப சுகாதார சேவைப் பிரிவுகளுக்கு பிரிக்கப்பட்டுள்ள இன விகிதாசாரம் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் குடும்ப சுகாதார சேவைப் பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ள விதம் திருப்திகரமாகவுள்ளதா என்பதையும்,

(ii) குடும்ப சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் திருப்திகரமான மட்டத்தில் உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0550/ '10

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த கங்கி பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவாவென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0634/ '10

8.

கௌரவ அநுர திஸாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010.08.01 ஆம் திகதியளவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த புதிய ஆட்சேர்ப்புகள் யாவையென்பதையும்,

(ii) சனசபை செயலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு அதில் உள்வாங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான ஆகக்குறைந்த தகைமைகள் யாவையென்பதையும்,

(iv) சனசபை செயலாளர் பதவிக்கென ஆட்சேர்ப்புச் செய்யும் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(v) தற்போது அறிவித்தல் வெளியிடப்பட்டு. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(vi) அவ்வாறாயின், நேர்முகப் பரீட்சையில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vii) இதில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(viii) மேற்படி ஆட்சேர்ப்பினை ஆரம்பிக்கும் மற்றும் நிறைவு செய்யும் திகதிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இப்புதிய பதவிக்காக சம்பந்தப்பட்ட அமைச்சின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை யாதென்பதையும்,

(ii) நிதி ஒதுக்கப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0466/ '10

9.

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அரசின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும், அது தொடர்பாக எதிர்க்கட்சி பொறுப்புக் கூறவேண்டும் என்றும் முன்னாள் சுகாதார அமைச்சர் 2010.06.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) அரசின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஸ்தம்பிதமடைந்துள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iii) தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஸ்தம்பிதமடைந்திருப்பின் மீண்டும் வெற்றிகரமான முறையில் அதனைச் செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0481/ '10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கையையும்,

(ii) ஒவ்வொரு வங்கியினதும் கிளைகளின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வங்கிகள் வெளிநாட:டு நாணயமாற்றுக் கொள்கையில் ஈடுபடுவதற்கு மத்திய வங்கியினால் தமக்குப் பொறுப்பளிக்கப்பட்ட அதிகாரங்களை கொண்டுள்ளனவா என்பதையும்,

(ii) வெளிநாட்டு நாணய மாற்று வணிகத்துறையில் ஈடுபட்டுள்ள வங்கிகளல்லாத கம்பனிகளின் எண்ணிக்கையும்,

(iii) அவ்வாறான கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் பங்குதாரர்கள் அல்லது பணிப்பாளர்களளையும்,

(iv) வெளிநாட்டு நாணய மாற்று வர்த்தகத்தில் ஈடுபடுத்துவதற்கு அவர்களை தெரிவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட நியதிகளையும்,

(v) கடந்த இரண்டு வருடங்களில் மாற்று வர்த்தகத்தில் வங்கிகளல்லாத இக்கம்பனிகளை ஈடுபடுத்துவதற்கு அனுமதித்ததன் காரணமாக நாட்டிற்கு கிடைத்த நன்மைகளையும்,

(vi) வெளிநாட்டு நாணய மாற்று வர்த்தகத்தில் வங்கிளல்லாத இக்கம்பனிகளை ஈடுபடுவதற்கு அனுமதித்ததன் காரணமாக நாட்டிற்கு கிடைத்த நன்மைகளையும்,

(vii) அவ்வாறான தரப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0499/ '10

11.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள காணப்படும் அரச மருத்துவமனைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த மருத்துவமனைகள் வகைப்படுத்தப்பட்டுள்ள முறை யாதென்பதையும்,

(iii) ஒவ்வொரு மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கான வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(v) அவை திருப்தியளிக்கக் கூடிய நிலையில் காணப்படுகின்றனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0551/ '10

12\.
கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த யான்ஓயா பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவாவென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0500/ '10

13\.
கௌரவ சஜித் பிரேமதாஸ,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கமநல சேவை ஆளுகைப் பிரதேசத்திலும் காணப்படும் பாரிய நீர்ப்பாசன குளங்களினதும் சிறிய நீர்பபாசன குளங்களினதும் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவை அமைந்துள்ள இடங்களும் மேற்படி குளங்களினது பெயர்களும் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2008 மற்றும் 2009 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மேற்படி குளங்களில் புனரமைக்கப்பட்ட குளங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்களும் அமைவிடங்களும் யாவையென்பதையும்,

(iii) புனரமைக்கப்படாத குளங்களின் பெயர்களும் அவற்றின் அமைவிடங்களும் யாவையென்பதையும்,

(iv) மேற்படி குளங்களை புனரமைப்பதற்கு எடுக்கும் காலம் திட்டவட்டமாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0552/ '10

14\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த கல்லடி பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா வென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0578/ '10

15\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து ஆண்டுதோறும் வெளியேறும் மருத்துவர்களின் எண்ணிக்கையையும்,

(ii) மருத்துவர்களாக பதிவு செய்வதற்கான தகுதியைப் பெறும் வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கையயும்,

(iii) மேற்படி பட்டதாரிகளை மருத்துவர்களாக பதிவுசெய்வதற்கான பரீட்சைகள் இலங்கை மருந்துவச் சங்கத்தால் மேற்கொள்ளப்ப்படுகின்றதா என்தையும், 01.01.2010 முதல் செயற்படும் விதமாக வேறொரு அதிகார சபையிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அப்புதிய அதிகார சபையின் பெயரையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நாட்டில் ஆண்டொன்றிற்கு தேவைப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) ஒரு மருத்துவருக்கு வழங்கப்படும் சராசரிச் சம்பளம் யாதென்பதையும்,

(iii) அவர்களுக்கு வழங்கப்படும் ஏனைய நன்மைகள் யாதென்பதையும்,

(iv) இலங்கையில் தகுதி பெறும் மருத்துவர்கள் விடுமுறையில் செல்வதற்கு வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அனுமதியளிக்கப்படுகின்றதா என்பதையும்,

(v) அவ்வாறாயின் அவர்கள் விடுமுறையில் இருப்பதற்கு அனுமதிக்கப்படும் கால அளவையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட நான்காம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2010, நவெம்பர் 22) [1].

* 2.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)" பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 6.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 7.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 8.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 9.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 10.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 11.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் - இரண்டாம் மதிப்பீடு.

* 16.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

17.

தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

செந்தாமரை (சர்வதேச) இலங்கை அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---